மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 260/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கலா | நாள் | 15.03.2023 |
| கணவர் பெயர் | கணேசன் | | |

**2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

34) என் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை மாரி மகன் நல்ல தம்பி என்பவருக்கு நான் விற்பனை செய்வதற்காக முயற்சி செய்தேன் என்றால், சரிதான். அந்த சமயத்தில் பரஞ்ஜோதி மேற்படி விற்பனை செய்யக்கூடாது என மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் 10.09.2015ம் தேதியில் தடங்கல் மனு அளித்தார் என்றால், சரிதான்.

35) மேற்படி தடங்கல் மனுவை பெற்றுக்கொண்ட சார் பதிவாளர் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு பதில் அளித்துவிட்டார் என்றால், சரிதான். மேற்படி சங்கதிகள் அனைத்தும் எனக்கும், நல்லதம்பி மற்றும் கமலா ஆகிய மூவருக்கும் தெரியும் என்றால், சரிதான். அதற்கு பின் உடனடியாக கடந்த 16.09.2015ம் தேதியில் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துவிட்டேன் என்றால், சரிதான்.

36) மேற்படி வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பே பரஞ்சோதி எனக்கும், நல்லதம்பி, கமலா மற்றும் மேச்சேரி சார்பதிவாளர் ஆகியோர்களுக்கு இவ்வழக்கில் உள்ள சொத்தை பாகம் பிரித்துக்கொள்ளலாம் எனவும் மேற்கொண்டு தவறான ஆவணங்களை உருவாக்க வேண்டாம் எனவும் கூறி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால், சரியல்ல.

37) மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்பும் அதில் கண்டுள்ளவாறு எவ்வித இணக்கமான முடிவுகளுக்கும் நான் உடன்படவில்லை என்றாலும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு நான் பரஞ்சோதியை அணுகவில்லை என்றாலும், சரியல்ல.

38) இவ்வழக்கு சொத்து தொடர்பாக தடங்கல் மனு அளிக்கப்பட்டதற்கு பின்பும்,

இவ்வழக்கை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பும், மேற்படி இடைபட்ட காலத்தில் நான் பரஞ்சோதியை அணுகி இவ்வழக்கை இணக்கமாக முடித்துக்கொள்ள முன்வர முயற்சிக்கவில்லை என்றால், சரிதான்.

39) இவ்வழக்கு சொத்தில் நான் ஒரு காலத்திலும் நான் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும், இவ்வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு உரிமையோ, உரிமை மூலமோ, சுவாதீன அனுபவமோ ஒரு காலத்திலும் இருந்ததில்லை என்றால், சரியல்ல.

40) என் பெயரில் இருந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று எனக்கு தெரியுமா என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்யும்போதுதான் எனக்கு தெரியும். இவ்வழக்கு சொத்து குறித்து என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது குறித்து அது ரத்து செய்யப்பட்ட தேதியிலேயே எனக்கு தெரியும் என்றாலும், அவ்வாறு இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில்தான் தெரியும் என நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

41) எந்த தேதியில் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது என என் வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால், சரியாக நினைவில்லை. மேற்படி பரஞ்சோதிக்கும், கமலாவிற்கு இடையே சுமூகமான உறவு இல்லை என்றால், சரியல்ல. இவ்வழக்கை பொறுத்தவரை கமலா நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை ஏற்கிறாரா? அல்லது மறுக்கிறாரா என்றால், மறுக்கிறார்.

42) இவ்வழக்கை பொறுத்தவரை நானும், மேற்படி கமலாவும், நல்லதம்பியும் கூட்டு சேர்ந்துகொண்டு பரஞ்சோதிக்கு எதிராக இவ்வழக்கை நடத்துகிறோம் என்றால், சரியல்ல. இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகள் தாவா சொத்தை என்னிடம் விலைக்கு கேட்டதாக என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், நான் அவ்வாறு சொல்லவில்லை. நல்லதம்பிதான் என்னிடம் விலைக்கு கேட்டதாக நான் சொல்லியுள்ளேன்.

43) அவ்வாறு நல்லதம்பி என்னிடம் எப்போது சொத்தை விலைக்கு கேட்டார் என்றால், தேதி, மாதம், வருடம் தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி நல்லதம்பி என்னிடம் தாவா சொத்தை விலைக்கு கேட்டார் என்ற சங்கதியை என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

(2ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஓம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.